## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் 04.11.2025 அன்று வேலூர் மற்றும் சென்னை மாவட்டங்களில், கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.





● வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில் 343 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.61 கோடி மதிப்பில், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், பேட்டரியில் இயங்கும் சக்கர நாற்காலிகள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை வழங்கினார்.







● வேலூரில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 49,021 பயனாளிகளுக்கு ரூ.415 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, ரூ.11.80 கோடி மதிப்பில் முடிவுற்ற பணிகளைத் தொடங்கிவைத்தார்.






● வேலூரில் அமைந்துள்ள ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் அதிநவீன சி.டி.ஸ்கேன் மையத்தைத் திறந்துவைத்தார்.





● வேலூரில் ஸ்ரீ நாராயணி பீடத்தின் சார்பில் நலிவுற்ற 500 நாட்டுப்புற கலைஞர்களுக்கு நிதியுதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.



● அணைக்கட்டு தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட – ஒன்றிய – பகுதி – பேரூர் – கிளை – வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் பாக முகவர்களுடன் கலந்துரையாடினார்.



● சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மறைந்த மேடவாக்கம் ப.ரவி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.